257865

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1995 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்

---

(1995, பெப்புருவரி மாதம் 10 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1995 பெப்புருவரி மாதம் 10 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 7, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 60

தபாற் செலவு : ரூபா 2.00

# 1995 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்.

[1995, பெப்புருவரி மாதம் 10 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 2/92

4084

## 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1995 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். **சுருக்கப் பெயர்.**

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 291 ஆம் பிரிவானது அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை நீக்கஞ் செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— **1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கக் குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டத்தின் 291 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

"(4) (அ) தவறாளர் குற்றப்பணத்திற்கு மாத்திரம், அத்துடன் குற்றப்பணத்தைச் செலுத்தத் தவறியதன்பேரில் மறியற்றண்டனைக்கும் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளவிடத்து தவறாளர், ஒரு குற்றப்பணம் என்ற வகையில் வருமதியான முழுப் பணத்தொகையையும் முழுமையாகச் செலுத்துகின்ற ஏதேனும் விடயத்தில் தவிர, நீதிமன்றம் பின்வருவனவற்றுள் எல்லாவற்றையும் அல்லது எவற்றையேனும் செய்யலாம் :—

(1) சொல்லப்பட்ட குற்றப்பணத்தினைச் செலுத்துவதற்கென கால அவகாசம் வழங்கலாம்;

(2) சொல்லப்பட்ட குற்றப்பணத்தினைத் தவணைப் பணங்களாகச் செலுத்துமாறு பணிக்கலாம்;

(3) சொல்லப்பட்ட குற்றப்பணத்தினைச் செலுத்துவதற்கு ஆளான ஆள், சொல்லப்பட்ட குற்றப்பணத்தினை அல்லது அதன் எவையேனும் தவணைப் பணங்களைச் செலுத்துவதற்கென பிணைகாரருடன் அல்லது பிணைகாரர்களுடன் அல்லது பிணைகாரரின்றி அல்லது பிணைகாரர்களின்றி, விதித்துரைக்கப்பட்ட இசைவான படிவத்தில் முறி ஒன்றினை நீதிமன்றம் திருப்திப்படும்படி எழுதித்தருவதற்கு சுதந்திரமுடையவராதல் வேண்டும் எனப் பணிக்கலாம் என்பதுடன் அத்தகைய முறி, இச்சட்டக் கோவையினால் ஏற்பாடு செய்யப்பட்ட வகையில் தரப்படலாம் என்பதுடன் வலுவுறுத்தவும்படலாம் :

ஆயினும், குற்றப்பணத்திற்கு மாத்திரமும் அத்துடன் அத்தகைய குற்றப்பணத்தைச் செலுத்தத் தவறியதன்பேரில் மறியற்றண்டனைக்கும் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள தவறாளர் ஒருவர் தொடர்பில் நீதிமன்றம் (i) ஆம் (ii) ஆம் (iii) ஆம் உட்பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட எல்லா விடயங்களையும் அல்லது அவற்றுள் எதனையும் செய்துள்ளவிடத்து, விதிவிலக்கிற்குட்பட்ட சந்தர்ப்பங்களிலும் அத்துடன் பதியப்படவேண்டிய காரணங்களுக்காகவும் தவிர, நீதிமன்றமானது அந்

தத் தவறுளர் தொடர்பில், அதே தவறு தொடர்பாக அதே தவறுளரால் அடுத்துவரும் தவறுகையொன்றன் விடயத்தில அத்தகைய உட்பந்தியில் குறித்துரைக்கப்பட்ட எல்லா விடயங்களையும் அல்லது அவற்றுள் எதனையும செய்தல் வேண்டும்.

(ஆ) இந்த உட்பிரிவு வலுவுக்கு வரும் திகதியன்று, குற்றப்பணம் ஒன்றின் கொடுப்பனவின் தவறுகையொன்றிற்கு ஆளெவரும் மறியற் றண்டனைக்காலப் பகுதியொன்றை அனுபவிக்குமிடத்து (அ) என்னும் பந்திக்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்காக அவருக்குத் தண்டனைத் தீர்ப்பளித்த நீதிமன்றத்தின் முன்னர் அத்தகைய ஆளைக் கொணர்வது அவரது தண்டனைத் தீர்ப்பை அவர் எந்த மறியற்சாலையில் அனுபவிக்கின்றாரோ அந்த மறியற்சாலையின் கண்காணிப்பாளரது கடமையாதல் வேண்டும்.

(இ) பந்தி (அ) என்பதன் (i) ஆம் அல்லது (ii) ஆம் உட்பந்தியின் கீழ் கொடுப்பனவு எதுவும் செய்யப்படவேண்டியுள்ளவிடத்து, அத்தகைய கொடுப்பனவு செய்யுமாறு பணிக்கும் நீதிமன்றத்தால் குறித்துரைக்கப் பட்ட காலப்பகுதிக்குள், அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் வங்கியில் எவரேனும் பெரும்பாகச் செயலாளரின் அலுவலகத்தில் அல்லது அஞ்சல் அலுவலகத்தில் அக் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும் என்பதுடன் இந்நோக்கத்திற்கென, குற்றப் பணத்தின் தொகையையும் ஒவ்வொரு தவணைக் கொடுப்பனவின் தொகையையும் குற்றப்பணம் எத்தனை தவணைப்பணங்களில் செலுத்தப்பட வேண்டும் என்பதனையும் இயைபான வேறு விவரங்களையும் கொடுத்து விகிதத்துரைக்கப்பட்ட படிவத்திலான தும் அத்தகைய வங்கியில், எவரேனும் பெரும்பாகச் செயலாளரின் அலுவலகத்தில் அல்லது அஞ்சல் அலுவலகத்தில் அத்தகைய கொடுப்பனவைச் செய்யும்போது முன்வைக்கப்படவேண்டியதுமான கூற்றொன்றை நீதிமன் றம் தவறுளருக்கு வழங்குதல் வேண்டும். வங்கி, பெரும்பாகச் செயலாளர் அல்லது அத்தகைய அஞ்சல் அலுவலகத்தின் அஞ்சல் அதிபர் விடயத்திற் கேற்ப அத்தகைய குற்றப்பணத்தின் அல்லது தவணைப்பணத்தின் கொடுப்பனவை ஏற்றுக்கொண்டதன்பேரில் அதன் பயனுக்கு அக்கூற்றில் புறக்குறிப்பு ஒன்றைச் செய்தலும் அத்தகைய கூற்றைத் தவறுளருக்குத் திருப்பியனுப்புதலும் அத்துடன் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் விட யத்திற்கேற்ப அத்தகைய குற்றப்பணத்தின் அல்லது தவணைப்பணத்தின் கொடுப்பனவிற்கான எண்பிப்பை அத்தகைய கொடுப்பனவைச் செய்யு மாறு பணிக்கும் நீதிமன்றத்திற்கு அத்தகைய கொடுப்பனவு செய்யப் பட்ட இரண்டு வாரங்களுக்குப் பிந்தாமல் அனுப்புதல் வேண்டும்.

(ஈ) இவ்வுட்பிரிவில் "அங்கீகரிக்கப்பட்ட வங்கி" என்பது 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித் தொழிற் சட்டத்தின் கருத்தெல்லைக் குள் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் குறித்துரைக் கக்கூடியவாறான உரிமம் பெற்ற ஏதேனும் வர்த்தக வங்கி என்றுபொருள் படும்.".

முதன்மைச் சட்டவாக்கத் திற்கான இரண்டாம் அட்டவணை யைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான இரண்டாம் அட்டவணை அவ் வட்டவணையின் இறுதியில் பின்வரும் புதிய படிவத்தைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

**1995 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்.**

**"இல. 18**

**குற்றப்பணத்தின் கொடுப்பனவிற்கு (பிணைகாரர் இன்றி) கொடுக்கப்பட வேண்டிய முறியின் படிவம்.**

(பிரிவு 291 (4))

............... என்னும் இடத்தைச் சேர்ந்த ............... ஆகிய நான் (தவறுனரின் பெயரும் முகவரியும்) 19 ............ மாதம் ............ ஆம் நாளாகிய இன்று ............ ஆம் இலக்க வழக்கு தொடர்பில் செலுத்துமாறு நீதிமன்றத்தால் தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்ட குற்றப்பணத்தின் கொடுப்பனவான ............ ரூபா பணத்தொகையை நீதிமன்றத்திற்குச் செலுத்துவதற்கு இதனால் என்னை உறுதியாகப் பிணிக்கின்றேன்.

சொல்லப்பட்ட முறியின் நிபந்தனையாவது, சொல்லப்பட்ட (தவறுனரின் பெயர்) ............ ஆகிய நான் ............ மாதங்களைக் கொண்டவொரு காலப் பகுதிக்குள் சொல்லப்பட்ட குற்றப்பணத்தை ............ தவணைப்பணத்தில் ........................ இல் (பெரும்பாகச் செயலாளரின் அலுவலகத்தில் வங்கியில் அல்லது அஞ்சல் அலுவலகத்தில்) செலுத்தினால் நான் சொல்லப்பட்ட முறியிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்பதும் கொடுப்பனவில் தவறினால் எனது தவறுகை தொடர்பில் மறியல் தண்டனைக் காலத்தை அனுபவிப்பதற்கு நான் கட்டுக்காவலுக்குள் எடுக்கப்பட வேண்டும் என்பதும் ஆகும்.

இம்முறியின்கீழ் விடுவிக்கப்படுமிடத்து, அறிவித்தல்கள் ஏதேனும் முகவரியிடப்படவேண்டிய எனது வதிவிடம் பின்வருமாறிருக்கும் :—

............... ............... ............... ............... ............... ........................

............... ............... ............... ............... ............... ........................

............... ............... ............... ............... ............... ........................

ஒப்பம்

தவறுனர்.

திகதி : ........................

............... 19 ............ மாதம் ............ ஆம் நாளன்று எனது முன்னிலையில் எடுக்கப்பட்டு ஒப்பேற்றப்பட்டது.

ஒப்பம்

பதிவாளர்.

1995 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்த) சட்டம்.

இல. 20

குற்றப்பணத்தின் கொடுப்பனவிற்கு (பிணைகாரர்களுடன்) கொடுக்கப்பட வேண்டிய முறியின் படிவம்.

(பிரிவு 291(4))

முதன்மைக் கடனாளி என்ற வகையில் ........................ என்னும் இடத்தைச் சேர்ந்த (தவறுளரின் பெயர், வாழ்க்கைத்தொழில், முகவரி) ........................ ஆகிய நானும் பிணைகாரர்/பிணைகாரர்கள் என்ற வகையில் ........................ என்னும் இடத்தைச் சேர்ந்த (பிணைகாரரின்/பிணைகாரர்களின் பெயர் வாழ்க்கைத்தொழில், முகவரி) .............. ஆகிய நானும்/நாமும்.................. ஆம் இலக்க வழக்குத் தொடர்பில் செலுத்துமாறு .............. (தவறுளரின் பெயர்) நீதிமன்றத்தால் தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ள குற்றப்பணமான அத்தகைய பணத்தொகையாகிய ....................ரூபாவை நீதிமன்றத்திற்குச் செலுத்துவதற்கு 19 ........ மாதம் .......... ஆம் நாளாகிய இன்று கூட்டாகவும் தனித்தும் எம்மை பிணிக்கின்றோம்.

சொல்லப்பட்ட முறியின் நிபந்தனையாவது, சொல்லப்பட்ட தவறுனர் முதன்மைக் கடனாளி என்ற வகையில் .............. ரூபா குற்றப்பணத்தை ............ ரூபா...........கொண்ட தவணைப்பணங்களில் .............. இல் (பெரும்பாகச் செயலாளரின் அலுவலகம், வங்கி அல்லது அஞ்சல் அலுவலகம்) ................ மாதங்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்குள் செலுத்துவதற்குப் பிணிக்கப்படுதல் வேண்டும் என்பதாகும்.

தவறுனர் மேற்படி நிபந்தனைக்கிணங்க சொல்லப்பட்ட தொகையை செலுத்தத் தவறும் பட்சத்தில் ................ (பிணைகாரரின்/பிணைகாரர்களின் பெயர்) ஆகிய நான்/நாம் சொல்லப்பட்ட குற்றப்பணத்தைச் செலுத்துவதற்குக் குறிப்பிட்ட முறையில் இத்தால் பொறுப்பேற்கின்றேன்/பொறுப்பேற்கின்றோம்.

ஒப்பம் ........................

தவறுனர்.

........................

பிணைகாரர்/பிணைகாரர்கள்.

திகதி : ........................

19...........மாதம்........ ...ஆம் நாளன்று எனது முன்னிலையில் எடுக்கப்பட்டு ஒப்பேற்றப்பட்டது.

ஒப்பம்........................

பதிவாளர்.

## இல. 21

### தவறாளருக்கு வழங்கப்பட வேண்டிய கூற்றின் படிவம்

(பிரிவு 291(4))

வழக்கு இல..................

..............இல் நடைபெறும் மேல்நீதிமன்றத்தில் .............. இல் நடைபெறும் நீதிவான்/நீதிமன்றத்தில் .................நடைபெறும் ஆரம்ப நீதிமன்றத்தில்.

மேலே கூறப்பட்ட வழக்கில், மேல் நீதிமன்றத்தின் நீதிபதியால்/நீதிவானால்/ஆரம்ப நீதிமன்றத்தின் நீதிபதியால் விளம்பப்பட்ட தீர்ப்பினால்/ஆக்கப்பட்ட கட்டளையால்.............. (தவறாளரின் பெயர், முகவரி) ஆகிய நீவிர் .......... தொகையிலான குற்றப்பணம் ஒன்றுக்கும் அத்துடன் குற்றப்பணத்தை செலுத்தத் தவறின் மறியற்றண்டனைக்கும் தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டீர்.

இக்கூற்றை ஏதேனும் வங்கியில், பெரும்பாகச் செயலாளரின் அலுவலகத்தில் அல்லது அஞ்சல் அலுவலகத்தில் முன்வைத்து உம்மீது விதிக்கப்பட்ட குற்றப் பணத்தை அத்தகைய வங்கியில், எவரேனும் பெரும்பாகச் செயலாளரின் அலுவலகத்தில் அல்லது அஞ்சல் அலுவலகத்தில் ..........ஆம் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் ஒவ்வொன்றும் ரூபா ..........கொண்ட............தவணைப்பணங்களில் செலுத்துமாறு நீதிமன்றத்தால் இத்தால் உமக்குக் கட்டளையிடப்படுகின்றது. குற்றப்பணத்தின் அல்லது தவணைப்பணத்தின் கொடுப்பனவை ஏற்றுக் கொண்டதன்மீது அடுத்தடுத்த தவணைப்பணங்களை நீர் செலுத்துவதனை இயலச் செய்வதற்கென இக்கூற்று வங்கியால், பெரும்பாகச் செயலாளரால் அல்லது அஞ்சல் அதிபரால் உமக்குத் திருப்பியனுப்பப்படும்.

நீதிமன்றக் கட்டளைப்படி
பதிவாளர்.

## இல. 22

### கொடுப்பனவின் ஏற்பிப்பு தொடர்பிலான படிவம்

(பிரிவு 291(4))

வழக்கு இல.....................

..............நீதிமன்றத்தின் பதிவாளருக்கு ........... (தவறாளரின் பெயர், முகவரி) என்பவரிடமிருந்து .............. ஆம் இலக்க வழக்கு தொடர்பில் செலுத்துமாறு நீதிமன்றத்தால் அவருக்கு கட்டளையிடப்பட்ட குற்றப்பணத்தின்/தவணைப்பணத்தின் கொடுப்பனவாக ........... ரூபாவை ........ஆம் திகதியன்று .............பெற்றுக் கொண்டமை இத்தால் ஒப்பேற்கப்படுகின்றது.

திகதி ........................

ஒப்பம்.................
வங்கி முகாமையாளர்/பெரும்பாகச்
செயலாளர்/அஞ்சல் அதிபர்.

(இலச்சினை)

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

4. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.